தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

## அவசரக் கூட்டப்பொருள்

2010ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 18.06.10 | 1 | இம்மாநகராட்சி பகுதியில் உள்ள பக்கிள் ஓடையில் இரண்டாம் கட்டமாக 2.402 கி.மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் தளம் மற்றும் சிறு கால்வாய் கட்டும் பணிகளுக்கு ரூ.750 லட்சத்திற்கு அரசாணை எண். 12 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05–03–2010ல் அனுமதி வழங்கி உள்ளது. அதில் ரூ 600 லட்சம் கேளிக்கை வரி ஈடு செய்யும் நிதியிலிருந்தும் ரூ 150 லட்சம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட பணிக்கு தொழில் நுட்ப அனுமதி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் எண். 1387/வ.அ–1/2010 நாள் 18–03–2010ல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட பக்கிள் ஓடை இரண்டாம் கட்ட பணிக்கு ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய இவ்வலுவலக கடிதம் எண். இ1/23660/2007 நாள் 24–03–2010ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 30–04–2010ம் தேதி மாலை 3.00 வரை இரண்டு அடுக்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>அதன்படி மேற்படி பணிக்கு பெறப்பட்ட Technical Bid. Local Tender Evaluation Committee க்கு 05–05–2010ல் பொருள் வைக்கப்பட்டது. கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>1. திரு. எஸ். சுதர்சன், குரூஸ்புரம்<br>2. திரு.எஸ். ரெக்ஸ், குருஸ்புரம்<br>3. திரு.எஸ்.ரம்போலா, குருஸ்புரம்<br><br>மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு எஸ். ரம்போலா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டிய டேவணித்தொகை முழுமையாக | 142) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தாத காரணத்தினால் திரு.எஸ். ரம்போலா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு மீதமுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளி Technical Bid Evaluation செய்வதற்கு State Level Tender Committee க்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் இவ்வலுவலக கடிதம் எண். 23660/07/இ1 நாள் 06–05–2010ல் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.<br><br>State Level Tender Evaluation Committee தனது கூட்டத்தினை 17–05–2010ம் தேதியன்று கூட்டி Technica Bid க்கு ஒப்புதல் வழங்கி Price Bid திறக்க அனுமதி வழங்கப்பட்டது.<br><br>Price Bid திறக்க சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பி 26–05–2010ம் தேதியன்று Price Bid திறக்கப்பட்டது. திரு. எஸ். சுதர்சன், ஒப்பந்ததாரர் என்பவர் ரூ 7,96,82,095 க்கு மதிப்பீட்டினை விட 9.94 சதவீதம் கூடுதலாகவும், திரு. எஸ். ரெக்ஸ் என்பவர் ரூ. 8,17,69,503க்கு மதிப்பீட்டினை விட 12.83 சதவீதம் அதிகமாகவும் கொடுத்துள்ளனர்.<br><br>குறைந்த Price Bid வழங்கிய திரு எஸ். சுதர்சன் என்பவரக்கு விலை குறைப்பு செய்ய கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. திரு எஸ். சுதர்சன் என்பவர் தனது 02–06.2010ம் தேதிய கடிதத்தில் குறைப்பு கடிதம் சமர்ப்பித்துள்ளார். அதன்படி திரு எஸ். சுதர்சன் என்பவர் மதிப்பீட்டை விட 4.98 சதவீதம் கூடுதலாக கொடுத்துள்ளார். திரு எஸ். ரெக்ஸ் என்பவர் ரூ. 12.82 சதவீதம் அதிகமாக கொடுத்துள்ளார். எனவேதிரு. எஸ். சுதர்சன் என்பவரின் Price Bid தொகையினை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு–**<br>பொறியாளர் கையேடு பக்கம் 9 பாரா 2,7,2ல் தெரிவித்துள்ளபடி மதிப்பீடு தொகையை விட 5 சதவீதம் வரை உள்ள பணிகளுக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு .எஸ். சுதர்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி 4.98 சதவீதத்தினை (ரூ.7,60,86,669/–) ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்கண்ட பணிக்கு 09–10ம் ஆண்டு Schedule of Rate அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது பெறப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ். சுதர்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ 7,60,86இ669/– (மதிப்பீட்டை விட 4.98 சதவீதம் அதிகம்) ஒப்புதல் அளிக்கலாம்.<br><br>23660/2007/இ1 | |
| | 2 | இம்மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பில் 16 வார்டுகள் துறை மூலம் மூன்று டிவிசன்களாக பிரிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதில் இரண்டாவது டிவிசன் பராமரிப்பு பணி செய்து வரும் வயர்மேன் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறுவதால் அவரால் பராமரிக்கப்பட்டு வரும் 5,6,7,9 ஙார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் தனியார் மூலம் பராமரித்துக்கொள்ளவும் மாமன்ற அனுமதியுடன் பராமரிப்பு பணிகள் செய்து வரும் மெசர்ஸ் சுதா இஞ்சினியரிங் நிறுவனத்தின் மூலம் மாமன்ற தீர்மான எண். 17 நாள் 04–01–2010ல் ஒப்புதல் அளித்துள்ள விலைவிகிதப்படி செய்து கொள்ளவும் அதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ. 125000/–க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 143) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 3 | இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள 51 வார்டுகளில் 20 வார்டுகள் வீதம் 5 வார்டுகள் வீதம் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண்.186 நாள் 21.3–2007ன் படி மூன்று வருடங்களுக்கு தனியார் மூலம் குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்ததாரர் நியமனம் செய்யவும், ஒவ்வொரு வருடமும் ஒப்பந்ததாரரின் பணி திறன் அடிப்படையில் மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தத்தை புதுப்பித்துக்கொள்ளவும் அனுமதி வழங்கியுள்ளது.<br><br>மன்றத் தீர்மான எண். 163 நாள் 31–8–2009ன்படி ஒப்பந்ததாரர்களுக்கு 16–7–2009 முதல் 15–7–2010 வரை ஒப்பந்தத்தை நீட்டித்து அனுமதி வழங்க மன்ற ஒப்புதல் செய்துள்ளது.<br><br>இந்த தனியார் மூலம் குப்பைகள் அள்ளும் பணிக்கான ஒப்பந்த காலம் 15–7–2010 அன்று முடிவடைவதாலும் மேற்கண்ட மன்றத்தீர்மானங்களின் அடிப்படையில் ஒப்பந்த காலத்தை நீட்டித்து வழங்க இயலாததாலும் மன்றம் தனியார் மூலம் குப்பைகள் அள்ளும் பணிக்கு மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கியுள்ளதாலும் 15–7–2010ம் தேதிக்கு பின் தொடர்ந்து தனியார் மூலம் குப்பைகள் அள்ளும் பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாலும் புதிதாக இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.<br><br>எனவே தற்போது நடைமுறையில் உள்ள தனியார் மூலம் குப்பைகள் அள்ளும் பணிக்கு ஒதுக்கிடு செய்யப்பட்ட மண்டலம் 1 (வார்டுகள் 10, 11, 12, 13 மற்றும் 14) மண்டலம் 2 (வார்டுகள்– 46, 47, 48, 49மற்றும் 50) மண்டலம்–3 (வார்டுகள் – 19, 20, 29, 30 மற்றும் 31) மண்டலம் –4 (வார்டுகள் – 41, 42, 44, 45 மற்றும் 51) ஆகிய வார்டுகளில் முதல் நிலை, மற்றும் இரண்டாம் நிலை குப்பைகள் சேகரம் செய்யவும் வாறுகால்களில் உள்ள சாக்கடை மண்ட, அகற்றி சுத்தம் செய்திடவும் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்ததாரர் நியமனம் செய்திடவும் திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000ன் படியும் துப்புரவு பணியில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் உள்ள தனியார் நிறுவனத்திடமிருந்து இரு உரை முறைப்படி ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், இதற்கான உத்தேச செலவினத்தொகை ஆண்டு ஒன்றிற்கு ரூ 235 லட்சத்திற்கு (இருநூற்றி முப்பத்தைந்து லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவுகள் செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.<br><br>எச்1 /10003/2010 | 144) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 4 | தூத்துக்குடி மாநகராட்சி ஜெயராஜ் ரோடு காய்கனி மார்க்கெட் மாநகராட்சி சாலையில் நகரளவு எண் 3468/3 எல் 3201 ச.அ. பரப்பளவு இடம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றுவது தொடர்பாக தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண். A.S. No. 117/2005 ன் 16–11–2009ம் தேதியில் மாநகராட்சிக்கு சாதகமாக வழங்கப்பட்ட தீர்ப்புரையை எதிர்த்து திரு. எஸ்.டி.சுந்தரபாண்டியன் என்பவரால் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு எண். 173/2010ன் படி வழக்கு தொடர்ந்து சார்பு நீதிமன்ற தீர்ப்புரைக்கு தடை உத்திரவு பெறப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் ஆஜராகி எதிர்வழக்காட மாமன்ற உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்தமைக்கும் வழக்கிற்கு ஆகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>எப்3/5425/10 | 145) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>5</td><td>இம்மாநகராட்சி எல்கைக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி கிராம புல எண் 223/6ல் (வாய் துறை) நாள் 20–11–1978ன் படி தூத்துக்குடி மாநகராட்சி சலவைத்துறைக்கு நில உரிமை மாற்றம் மேற்படி நிலவரியிலுள்ள ஆக்கிரமிப்புகரளஅகற்றி சலவைத்துறை கட்டிடம் கட்டி தரக்கேட்டு தூத்துக்குடி சலவைத் தொழிலாளர் சங்க செயலாளர் திரு எஸ். சுப்பையா அவர்கள் மாநகராட்சி ஆணையர் அவர்களை 3வது பிரதிவாதியாக குறிப்பிட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குஎண். W.P. (MD) No. 743/2010ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>எனவே மேற்கண்ட வழக்கில் மாநகராட்சி சார்பாக மாமன்ற வழக்கறிஞர் திரு எஸ். கடற்கரை அவர்கள் ஆஜராகு வழக்கினை நடத்தவும், அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு– மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1/20446/87</td><td>146) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>6</td><td>இம்மாநகராட்சி புதிய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள கீழ்க்கண்ட கடையை தற்போது நடத்தி வரும் அனுபோகம் இல்லாத உரிமம்தாரர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 92 நாள் 3–7–07ன் படி பெயர் மாற்றக் கட்டணமாக 12 மாத வாடகை தொகை மற்றும் வைப்புத்தொகை செலுத்தி உரிமம் பெயர் மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பித்துள்ள கீழ்க்கண்ட நபர்களின் மனு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ. எண்</td><td>கடை எண்</td><td>கடை பழைய உரிமைதாரர் பெயர் (ம) முகவரி</td><td>தற்போதைய உரிமைதாரர் பெயர் (ம) முகவரி</td></tr>
<tr><td>1</td><td>72 மற்றும் 73</td><td>வி.எஸ்.ஆர்.கணேசன்<br>8/5 என்.ஜி.ஓ. காலனி<br>தூத்துக்குடி.</td><td>திருமதி. அ. வேளாங்கன்னி<br>க/பெ. ஜே.வி. அசோகன்<br>39 பாஸ்கரதாஸ் நகர் 1ம் பிரிவு<br>மதுரை. 5</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 92 நாள் 3–7–07ன்படி 12 மாத வாடகை பெயர் மாற்றம் கட்டணமும்மற்றும் வைப்புத் தொகையாக 12 மாத வாடகையும் செலுத்தியுள்ளதால் கலம் எண் 2ல் கண்டுள்ள கடைக்கு கலம் எண்.3ல் கண்டுள்ள பெயரிலிருந்து கலம் எண்4ல் கண்டுள்ள பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ16/8215/2010</td><td>147) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>7</td><td>7. இம்மாநகராட்சி பணியாளர் திரு வி. ராஜேந்திரன் என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் தொகை ரூ 10,000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. அன்னார் இம்மாநகராட்சி பணியாளராக பணிபுரிந்து வருகின்றார். இவருக்கு திருமணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ10,000/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–மாமன்றம் திருமணக்கடன் வழங்க அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.9630/10/பி4</td><td>148) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 8 | 8. இம்மாநகராட்சி இராஜாஜி பூங்கா நீர்தேக்க நிலைய வளாகத்தில் புதியதாக கிணறு ஒன்று அமைக்கப்பட்டு மின்மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட கிணற்று நீரை குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கு பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் தனியார் லாரிகள் மூலம் பிடித்து செல்ல ஏதுவாக 6000 (ஆறாயிரம்)லிட்டர்க்கு ரூ 100/– வீதம் மாநகராட்சி கரூவூலத்தில் செலுத்தி பொதுமக்கள் பயனடைய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மேற்கண்ட கிணற்று நீரை குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கு பொது மக்கள் உரிய தொகை செலுத்தி தனியார் லாரிகள் மூலம் பயன்படுத்தி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/10100/2010 | 149) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

மாமன்றம், தூத்துக்குடி.
நாள் 16–06–2010

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி.